பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

10. 09. 2024 **TUESDAY** 7. 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. அதிநவீன தொழில்நுட்ப சாதனங்களை தயாரிக்க பயன்படுத்தப்படும் செமிகண்டக்டர் துறையின் செமிகான் இண்டியா 2024 மாநாட்டினை பிரதமர் திரு. நரேந்திர மோடி நொய்டாவில் நாளை தொடங்கி வைக்கிறார்.

2. காஸாவில் நடைபெற்று வரும் தாக்குதல்கள் கவலை அளிப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. தில்லியில் பட்டாசுகளை விற்பது மற்றும் வெடிப்பதற்கு அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேிவரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக தில்லி அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழ்நாட்டில் **Jabil** நிறுவனம் 2 ஆயிரம் கோடி முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கையெழுத்திட்டுள்ளார்.

5. தெற்காசிய தடகள கூட்டமைப்பின் ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நாளை சென்னையில் தொடங்குகின்றன.

>>>>><<<<<

பத்ம விருதுகளுக்கு அதிக அளவில் தகுதியுள்ள நபர்களை வரும் 15ஆம் தேதிக்குள் பரிந்துரைக்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இதுவரை பத்ம விருதுகளுக்காக பல பரிந்துரைகள் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் கடைக்கோடியில் சிறப்பாக பணியாற்றி வரும் நபர்களுக்கு பத்ம விருதுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பத்ம விருதுகள் பெற்றுள்ள அவர்களது வாழ்க்கை மிகவும் உத்வேகம் அளிக்கக்கூடியதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பத்ம விருதுகள் அளிப்பதில் வெளிப்படைத்தன்மை வேண்டும் என்ற அடிப்படையில், மக்களிடமிருந்து பரிந்துரைகள் கேட்கப்படுவதாக பிரதமர் கூறியுள்ளார்.

இந்த விருதுக்கு பரிந்துரைக்க விரும்புபவர்கள் **awards.gov.in** என்ற இணையதளம் வழியாக பரிந்துரைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

அதிநவீன தொழில்நுட்ப சாதனங்களை தயாரிக்க பயன்படுத்தப்படும் செமிகண்டக்டர் துறையில் உலக அளவில் இந்தியாவின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் செமிகான் இண்டியா 2024 மாநாடு நொய்டாவில் நாளை நடைபெறவுள்ளது.

'செமிகண்டரின் எதிர்காலத்தை வடிவமைப்போம்' என்ற கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், செமிகண்டக்டர் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

தெற்காசியாவில் மிகப் பெரிய கண்காட்சியாக நடைபெறும் மின்னணு கண்காட்சியுடன், இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த செமிகண்டக்டர் துறையில் முன்னணி வகிக்கும் நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

இதில் 250 நிறுவனங்கள் தங்களது செமிகண்டக்டர் தொடர்பான கண்காட்சி அரங்குகளை அமைக்கவுள்ளன. செமிகண்டக்டர் துறையில் சிறந்து விளங்கும் 150 நிபுணர்கள் இந்த கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர்.

>>>>><<<<<

இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையத்தின் முதலாவது அமைப்பு தின விழா புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த விழாவை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தொடங்கி வைத்து உரையாற்றவுள்ளார்.

சைபர் குற்றங்களை தடுப்பதற்கான முக்கியமான முன்முயற்சிகளுக்கான திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

சைபர் குற்றங்கள் தடுப்பு மையத்தையும் அவர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

நாட்டின் சைபர் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பவர்களை எதிர்கொள்ள சைபர் கமாண்டோக்கள் திட்டத்தையும் அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.

இந்த விழாவில் மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. பண்டி சஞ்சய்குமார், உள்நாட்டு பாதுகாப்பு சிறப்பு செயலாளர், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச்செயலாளர்கள், காவல்தறை தலைவர்கள், மூத்த அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

>>>>><<<<<

காஸாவில் நடைபெற்று வரும் தாக்குதல்கள் கவலை அளிப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ரியாதில் நடைபெற்ற இந்திய – வளைகுடா நாடுகளின் கூட்டமைப்புக் கூட்டத்தில் பேசிய அவர், இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நடைபெற்று வரும் சண்டையில், அப்பாவி மக்கள் கொல்லப்படுவது மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்தார்.

அதேநேரத்தில் தீவிரவாதம் மற்றும் பொதுமக்களை பிணைக்கைதிகளாக பிடித்து வைப்பதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர அமைதி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உலக அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு வளைகுடா நாடுகள் சிறந்த ஒத்துழைப்பு அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா-வளைகுடா நாடுகளுக்கு இடையிலான கட்டுப்பாடில்லாத வர்த்தக உடன்பாடுகளுக்கான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்கான செயல் நடவடிக்கைகளுக்கு இந்தியா – வளைகுடா நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.

இதில், அறிவியல் மற்றும் கல்வித்துறை சார்ந்த ஒத்துழைப்புகள் மேம்படுத்தப்படும் என்றும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்தியாவுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் விதத்திலும், இந்தப் பகுதியில் வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் விதத்திலும் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளதாக வளைகுடா நாடுகளுக்கான பொதுச்செயலாளர் திரு. **Jasel Albudaiwi** குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற விநாயகர் ஊர்வலத்தில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் தொடர்ந்து கொலைகள் நடந்து வருவதாகவும், வீதிக்கு ஒரு டாஸ்மாக் கடையை அரசு திறந்து, மக்களை மதுவிற்கு அடிமையாக்கி வருவதாகவும் தெரிவித்தார்.

>>>>><<<<<

தில்லியில் தொடர்ந்து காற்று மாசு ஏற்பட்டுள்ளதை அடுத்து, பட்டாசுகளை தயாரிப்பது, இருப்பில் வைப்பது, விற்பது மற்றும் வெடிப்பதற்கு அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் தேதிவரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக தில்லி அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, செய்தியாளர்களிடம் பேசிய தில்லி சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. கோபால்ராஜ், தில்லியில் அடுத்து வரக்கூடிய குளிர்காலத்தில் காற்று மாசு அதிகரிக்கும் என்பதால், பட்டாசு மீதான தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தில்லி காவல்துறை, மாசு கட்டுப்பாட்டு வாரியம், வருவாய்த்துறை ஆகியவற்றுடன் இணைந்து பட்டாசு தடையை அமல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக திரு. கோபால்ராஜ் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழ்நாட்டில் **Jabil** நிறுவனம் 2 ஆயிரம் கோடி முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கையெழுத்திட்டுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள அவர், தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்க்கும் விதத்தில், பல்வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தகை மேற்கொண்டு வருகிறார்.

இன்று திருச்சியில் **Jabil** நிறுவனத்தின் மின்னணு சாதனங்கள் உற்பத்தி ஆலையை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டார்.

இந்த நிறுவனம் அமைவதன் மூலம் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

இந்த ஆலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்னணு பொருட்கள், ஆப்பிள், சிஸ்கோ, **HP** நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

>>>>><<<<<

காவிரிக் கரை மற்றும் நீர்நிலைகளின் கரையோரங்களில் ஒரு கோடி பனைவிதைகள் நடும் பணியினை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

சேலம் மாவட்டம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், கொப்பம் ஏரியின் கரையோரங்களில் பனைவிதைகளை நடும் பணி நேற்று நடைபெற்றது.

பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் விதத்தில், தமிழகம் முழுவதும் பனை விதைகள் சேகரிக்கப்பட்டு, ஐந்து கட்டங்களாக பனைவிதைகள் நடும் பணி நடத்தப்படவுள்ளது.

எட்டு மாவட்டங்களில் காவிரி கரையின் இருபுறங்களிலும் சுமார் 416 கிலோமீட்டர் தொலைவுக்கு பனைவிதைகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணியில் நூற்றுக்கு மேற்பட்ட சுற்றுச்சூழல் அமைப்புகள், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடவுள்ளனர்.

**>>>>><<<<<**

வியட்நாமின் வடக்குப்பதியில் வீசிய **Yagi** புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் 59 பேர் உயிரிழந்தனர், 247 பேர் காணாமல் போயுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக, **Phu Tho** மாகாணத்தில் உள்ள எஃகு மேம்பாலம் சரிந்து விழுந்ததாகவும், பாலத்தின் மேல் பயணம் செய்து கொண்டிருந்த 10 வாகனங்கள் மற்றும் இரண்டு இருசக்கர வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லட்சத்து 13 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் மற்றும் 22 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த பல்வேறு உணவுப் பயிர்கள் சேதமடைந்துள்ளதாக அந்நாட்டின் வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் **Yagi** புயல் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

**>>>>><<<<<**

தெலங்கானா மாநிலத்தில் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காக 6 பேர் கொண்ட மத்தியக்குழு நாளை கம்மம் மற்றும் மொஹபூதாபாத் மாவட்டங்களுக்கு செல்கிறது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணைச்செயலாளர் கர்னல் கீர்த்தி பிரதாப்சிங் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் நிதி, வேளாண், சாலை போக்குவரத்து, ஊரக வளர்ச்சித்துறையின் அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்

**>>>>><<<<<**

தெற்காசிய தடகள கூட்டமைப்பின் ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நாளை சென்னையில் தொடங்குகின்றன.

இந்தப் போட்டிகளை மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

இதில் ஏழு தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 173 தடகள வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

28 பிரிவுகளில் ஆடவர், மகளிர் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த தடகள வீரர்களான வருண் ஓரி மனோகர், ஹரிகரன் கதிரவன், ஜித்தின் அர்ஜுணன், ரவிப்பிரகாஷ், அபிநயா ராஜராஜன், பிரதிக்ஷா யமுனா உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**>>>>><<<<<**

ஆசிய சாம்பியன் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 5-1 என்ற கோல்கணக்கில் ஜப்பானை வென்றது.

சீனாவின் **Hulunbuir–**ல் நடைபெற்ற இப்போட்டியில், இந்தியாவின் சுக்ஜித் சிங் இரண்டாவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். பின்னர் 60வது நிமிடத்தில் மற்றொரு கோலையும் அடித்தார்.

இந்த ஆட்டத்தின் 41வது நிமிடத்தில் ஜப்பானின் **Matsu Moto Kazumasa** ஒரு கோல் அடித்தார்.

நடப்பு சாம்பியனான இந்திய அணி, ஏற்கனவே சீனாவை 3-0 என்ற கணக்கில் வென்றுள்ளது.

நாளை நடைபெறும் போட்டியில், இந்தியா – மலேசிய அணியை எதிர்கொள்கிறது.

வரும் 16ஆம் தேதி அரையிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் முதல் நான்கு இடங்களை பெற்றுள்ள அணிகள் மோதுகின்றன.

இறுதிப்போட்டி இம்மாதம் 17ஆம் தேதி நடைபெறுகிறது.

**>>>>>END<<<<<**